**செய்தி வெளியீடு எண்: 346** **நாள்: 02.06.2017**

அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் வாசகர்கள் மற்றும் குழந்தைகள் பயன்பெறும் வண்ணம் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு 'கோடை கொண்டாட்டம்' என்ற தலைப்பில் சிறுவர்களுக்கான கதை சொல்லி, இசை, ஓவியம், கைவினைப் பொருட்கள் செய்தல், அறிவியல் செயல்திறன், பொம்மலாட்டம், யோகா, ஞாபகத்திறன் பயிற்சி, சதுரங்கம், வினாடி வினா, புத்தகங்களை பற்றிய அறிமுகம், படக்கதை எழுதும் பயிற்சி மற்றும் காகிதத்தில் பொம்மை செய்தல் போன்ற நிகழ்ச்சிகள் இலவசமாக 01 ஏப்ரல் 2017 முதல் 31 மே 2017 முதல் தினந்தோறும் சென்னையில் உள்ள முக்கிய கதை சொல்லிகள் மற்றும் துறை சார்ந்த ஆசிரியர்களைக் கொண்டு தொடர்ந்து சிறப்பாக வாசகர்கள் மற்றும் குழந்தைகளின் பேராதரவுடன் நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி முதல் 12:30 மணிவரை நடைபெறவுள்ளது.

மேலும், 'பொன்மாலைப்பொழுது' என்ற தலைப்பில் பிரபல இலக்கிய ஆளுமைகளுடன் சந்திப்பு வாரந்தோறும் சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணி முதல் 7.30 மணி வரை 2017 ஏப்ரல் மாதம் முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது இந்நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாக 2017 ஜுன் மாதத்தில் கீழ்கண்ட ஆளுமைகளுடன் சந்திப்பு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 03.06.2017 | : | வழக்கறிஞர். அருள்மொழி |
| 10.06.2017 | : | கவிஞர். யுகபாரதி |
| 17.06.2017 | : | எழுத்தாளர். கலாப்ரியா |
| 24.06.2017 | : | பத்திரிக்கையாளர். கவிதா முரளிதரன் |

இவற்றைப்பற்றிய விவரங்கள் www.annacentenarylibrary.com என்ற இணையதளம் மூலம் காணலாம் என தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**